பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | புரட்டாதி 19 | திங்கட்கிழமை | 05.10.2020 | கதிர் 200

## தமிழக மீனவரின் சடலம் இந்தியாவுக்கு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக்.05

அல்லைப்பிட்டியில் கரை ஒதுங்கிய இந்திய மீனவரின் சடலத்தைப் பொறுப்பேற்று இந்தியாவிற்கு அனுப்பி வைக்க யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

2

# கம்பஹாவில் சமூகத் தொற்று படுதீவிரம் மேலும் 69 பேர் கொரோனாவால் பாதிப்பு

## அதிர்ச்சியில் அரசு; உயர்மட்டத்தில் பேச்சு

**கொழும்பு, ஒக்ரோபர் 05**

**கம்பஹா மாவட்டத்தில் திவுலப்பிட்டிய பிரதேசத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானார் என்று நேற்று அடையாளம் காணப்பட்ட பெண்ணுடன் தொடர்புகளைப் பேணிய 69 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.**

**அந்தப் பெண் பணியாற்றும் மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் உள்ளவர்களிடையே நடத்தப்பட்ட பரிசோதனையிலேயே அவர்களுக்கும் தொற்று இருக்கின்றமை உறுதியாகியுள்ளது.**

2



கம்பஹா மாவட்டத்தில் ஊரடங்கு அமுலில் உள்ள பிரதேசத்தில் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

## ஆனமடுவ இளைஞர் ஒருவருக்கு மூன்றாவது தடவை கொரோனா!

கொழும்பு, ஒக்.05

ஆனமடுவவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மூன்றாவது தடவையாகக் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார் எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனமடுவ, தேனன்குரிய பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞரே மூன்றாவது தடவையாகக் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

2

## உரிய திகதிகளில் பரீட்சைகளை நடத்துவதில் அரசுக்குச் சிக்கல்!

### பிற்போடத் தீர்மானம்

கொழும்பு, ஒக்.05

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஆகியன திட்டமிட்ட திகதிகளில் நடைபெறுமா அல்லது பிற்போடப்படுமா என்பது தொடர்பில் இன்று அல்லது நாளைக்குள் உரிய அறிவிப்பு விடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

2

## நோய்த்தாக்கம் அதிகரித்தால் நாடெங்கும் ஊரடங்கு அமுல்!

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, ஒக்.05

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பொலிஸ் ஊடரங்குச் சட்டம் பிறப்பிக்கப்படுமா என்ற கேள்விக்குப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இன்று பதிலளித்துள்ளார்.

இதன்போது அவர் கூறியதாவது:-

நாட்டில் மூன்று பொலிஸ் பிரிவுகளுக்குத்தான் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய பகுதிகளுக்கு ஊரடங்கு உத்தரவைப் பிறப்பிக்கும் எண்ணம் தற்போது இல்லை. எனினும், கொரோனா வைரஸ் நோய்த்தாக்கம் அதிகரித்தால் நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்படும். இன்று இரவுக்குள் அது பற்றி தீர்மானம் எடுக்கப்படும். - என்றார்.

## ஆசன எண்ணிக்கைக்கே அனுமதி; பஸ், ரயிலில் முகக்கவசம் கட்டாயம்

### போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஒக்.05

சமூகத்தில் கொரோனா வைரஸ்தொற்று மீண்டும் இனம் காணப்பட்டுள்ள நிலையில் போக்குவரத்து அமைச்சு இன்று முதல் பயணிகள் போக்குவரத்து நடைமுறைகளில் பின்பற்றப்பட வேண்டிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

2

## திவுலப்பிட்டிய மாணவிக்குக் கொரோனா: 1,500 மாணவர்கள் சுயதனிமைப்படுத்தல்!

கம்பஹா மாவட்டம், திவுலப்பிட்டிய பிரதேசத்தில் தாயும் அவரது மகளான 16 வயது மாணவியும் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், குறித்த மாணவி கல்வி கற்கும் பாடசாலையின் 1,500 மாணவர்கள் அவர்களது வீடுகளில் கட்டாய சுய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவர்கள் திவுலப்பிட்டிய

2

## புங்குடுதீவு யுவதிக்குக் கொரோனா

திவுலப்பிட்டிய ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்த பின்னர் யாழ்ப்பாணம் புங்குடுதீவுக்கு திரும்பிய இரண்டு பெண்களில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று இருக்கின்றமை இன்று வைத்தியபரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து அவரைத் தனிமைப்படுத்தி சிகிச்சைக்கு அனுப்பிவைக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இன்று யாழ்ப்பாணத்தில் 83பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் வடமராட்சி கிழக்கில் தங்கி நின்று மீன்பிடியில் ஈடுபட்ட 72 மீனவர்கள், இந்தியப் படகில் ஏறிய 09 மீனவர்கள் மற்றும் ஆடைத் தொழிற்சாலையில் இருந்து புங்குடுதீவுக்குத் திரும்பிய இரண்டு யுவதிகள் அடங்குவர். இவர்களில் ஒரு யுவதிக்கு மட்டும் தொற்று இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## மினுவாங்கொடையில் அவசர நிலை அமுல்!

மினுவாங்கொடைப் பிரதேசத்தில் அவசர நிலை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது எனச் சுகாதார அமைச்சு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் மினுவாங்கொடை, வெயாங்கொடை மற்றும் திவுலப்பிட்டிய ஆகிய பகுதிகளில் மறு அறிவிப்பு வரை தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் மினுவாங்கொடை மற்றும் திவுலப்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 70 பேரும், 16 வயது மாணவியும் கொரோனாத் தொற்றுடன் கண்டறியப்பட்ட நிலையில் அவர்களுடன் நெருங்கிப் பழகிய வர்களைக் கண்டறிந்து தொற்றுப் பரவலைத் தடுக்க இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## யாழ். தொல்பொருள் திணைக்களத்தில் பணிபுரியும் பெண் தனிமைப்படுத்தலில்!

யாழ்ப்பாணம் - நாவலர் வீதியில் அமைந்துள்ள தொல்பொருள் திணைக்களத்தில் பணிபுரியும் பெண்ணொருவரை தனிமைப்படுத்த சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பெண்ணின் தாயார், திவுலப்பிடியவில் கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட பெண் பணிபுரிந்த ஆடைத் தொழிற்சாலையில் பணி புரிந்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையிலேயே அந்தப் பணியாளரின் தாய் மற்றும் உறவினர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையைத் தொடர்ந்து இவரை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்

2

## ஆனமடுவ இளைஞர் ஒருவருக்கு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஓகஸ்ட் 18ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து (டுபாய்) வந்த குறித்த இளைஞர் வெலிக்கந்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட வேளை அவருக்குக்கொரோனாத்தொற்றுள்ளமை முதலில் தெரிய வந்தது.

வெலிக்கந்தை வைத்தியசாலை யிலிருந்து வெளியேறிய இளைஞர்தன்னை வீட்டில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தினார்.

அதன்பின்னர் குறித்த இளைஞரிடம் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது பி.சி. ஆர். பரிசோதனையின்போது இரண்டாவது தடவை அவர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்தது.

அதையடுத்து அந்த இளைஞர் இரணவில கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு மாற்றப்பட்டார். இரண்டாவது தடவை அவர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய பின்னர் அவரது வீட்டைப் பாதுகாப்பாக மாற்றுவதற்கும், அவர் சுய தனிமைப்படுத்தலை மேற்கொள்வதற்கான சூழலை ஏற்படுத்துவதற்கும் ஏதுவான சூழலைப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தினர் மேற்கொண்டனர்.

சுய தனிமைப்படுத்தலில் இருந்த வேளை காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட குறித்த இளைஞர் இம்மாதம் 2ஆம் திகதி சிலாபத்திலுள்ள கொரோனா பரிசோதனை நிலையத்தில் சேர்க்கப்பட்டார். இதன் போது அவருக்கு மீண்டும் கொரோனா வைரஸ் பாதிப்புள்ளமை தெரியவந்துள்ளது - என்றார்.

## கம்பஹாவில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்படி பரிசோதனை நடத்தப்பட்ட 150பேரில் 69பேருக்குத்தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு இன்று அறிவித்துள்ளது.

பெண்ணுக்குத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து மினுவாங்கொட, திவுலப்பிட்டிய மற்றும் வெயாங்கொட ஆகிய பிரதேசங்களில் நேற்று முதல் ஊரடங்கு சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் நாடு பூராகவும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டது.

இந்தநிலையில், குறித்த பெண்ணுடன் தொடர்புகளைப் பேணிய 500 இற்கும் மேற்பட்டோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இவர்களில் 150 பேரின் பரிசோதனை முடிவுகள் இன்று காலை வெளியானதுடன் மற்றைய முடிவுகள் இன்று மாலை வெளியாகவுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் சமூகத் தொற்றாக மாறியமை அரசை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. அங்கு கொரோனா எவ்வாறு புகுந்தது? அதை உடனடியாக எவ்வாறு தடுப்பது? போன்ற கேள்விகளுக்கு விடைகளைக் காணும் உயர்மட்டப் பேச்சில் அரசு ஈடுபட்டு வருகின்றது.

## உரிய திகதிகளில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன் மாணவர்களின் சுகாதார நலனைக் கருத்தில்கொண்டே அரசு எந்தவொரு முடிவையும் எடுக்கும் எனவும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஆசன எண்ணி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதற்கிணங்க பயணிகள் முகக்கவசம் அணிவது கண்டிப்பானது எனபோக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க பயணிகள் போக்குவரத்துபஸ்களில் அனைத்துப்பயணிகளும் சாரதியும்நடத்துநரும்முகக்கவசம்அணிய வேண்டும் என்றும் பயணிகள் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

அத்துடன் ரயில் பயணிகள் ரயில் நிலையங்களுக்குள் பிரவேசிக்கும் முன்பாகக் கைகளை கழுவுவது, முகக் கவசங்கள் அணிவது மற்றும் சமூக இடைவெளியை பேணுவது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சேவையில் உள்ள அனைத்து அரச மற்றும்தனியார்பஸ்களில்ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமைய மாத்திரமே பயணிகள் பயணிக்க முடியும்.

பஸ்களில் ஆசனங்களின் எண்ணிக்கையின்அடிப்படையிலேயேபயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டும் என்ற திட்டம் நாட்டில் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் கொரோனா வைரஸ் தொற்று அச்சம் குறைவடைந்ததைத் தொடர்ந்து, அதனைப் பெரிதளவில் நடைமுறைப்படுத்தவில்லை. இந்தநிலையில், உடன் அமுலுக்கு வரும் வரையில் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. - என்றார்.

## திவுலப்பிட்டிய ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
'பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

மேற்படி பாடசாலையில் கற்கும் திவுலப்பிட்டிய பிரதேசத்தைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களைத் தனிமைப்படுத்துவதற்காக இன்று நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் அவர் மேலும் கூறினார்.

## யாழ். தொல்பொருள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள தொல்பொருள் திணைக்களத்தில் பணிபுரியும் அந்தப் பெண், கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது நண்பருடன் யாழ்ப்பாணம் சென்றுள்ளார்.

இந்நிலையிலேயே அவரையும் கோட்டை பகுதியில் பணிபுரியும் அவரது நண்பரையும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத் தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## திவுலப்பிட்டிய ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தியாவிலிருந்துகடற்றொழிலிற்காக கடந்த புதன் கிழமை புறப்பட்ட நிலையில் நடுக்கடலில் மாயமான மீனவர் எனக் கருதப்படுபவர் யாழ்பாணம் அல்லப்பட்டி கடற்கரையில் நேற்று முன்தினம் ஒதுங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த புதன்கிழமை காலை ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து தங்கச்சிமடத்தை சேர்ந்த தனிக்கிளாஸ் என்பவருக்குச்சொந்தமான விசைப்படகில் மீனவர்கள் மீன் பிடியில் ஈடுபட்டிருந்த போது புதன்கிழமை இரவு கச்சத்தீவுக்கு அண்மையில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது திடீரென கடலில் சீற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் படகிலிருந்து கார்சன் என்ற மீனவர் நிலை தடுமாறி நடுக்கடலில் விழுந்து மாயமானார்.

அல்லைப்பிட்டியில் கரை ஒதுங்கியது இவரது உடலாக இருக்கலாம் எனக் கருதப்பட்ட நிலையில் அந்தச் சடலத்தை அடையாளம் காட்டி நீதிமன்ற அனுமதியின் பெயரில் யாழில் உள்ள இந்தியத் தூதரகம் பொறுப்பேற்றுள்ளது. இந்தச் சடலம் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழருக்கு நேர்ந்த கதி!

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற அரசமைப்பின் இருபதாவது திருத்தம் தொடர்பான ஆய்வரங்கில், அதற்குத் தலைமை வகித்த கட்சியின் மூத்த துணைத் தலைவரும், வடக்கு மாகாண சபை அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் அங்கு குறிப்பிட்ட ஒரு விடயம் பலராலும் அதிகம் கவனிக்கப்படாமல் போயிற்று என்பது உண்மை.**

**அந்த ஆய்வரங்கின் வளவாளர்களுள் ஒருவரும், அங்கு சட்ட உரை நிகழ்த்தியவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனுக்கு அந்த உரையின் மேற்படி பகுதி – அதன் ஆழம் – நிச்சயம் புரிந்திருக்கும்.**

**நல்லாட்சி அரசில் இடம்பெற்ற புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி தொடர்பில் தமிழரின் நிலைப்பாட்டை விவரித்த சி.வீ.கே. சிவஞானம், ‘கடல் வற்றும் என்பது காத்திருந்து, காத்திருந்து கடைசியில் குடல் வற்றிச் செத்ததாம் கொக்கு’ என்று உதாரணம் கூறி, தமிழர் நிலைப்பாட்டை ஒப்பிட்டார்.**

**அதுவும் மாகாண சபைத் தேர்தல் விடயங்களைக் குறிப்பிட்டுப் பேசிக் கொண்டிருந்த சி.வீ.கே.சிவஞானம், மாகாணசபைத் தேர்தல்களை நடத்த முடியாமல் போனமையைச் சுட்டிக் காட்டும் போதே மேற்படி பழமொழியைக் கோடி காட்டினார் அவர்.**

**தேசிய இனப் பிரச்சினைக்குரிய அரசியல் தீர்வையும் உள்ளடக்கியதான புதிய அரசமைப்பு இதோ வருகின்றது, அதோ வருகின்றது என்று கடல் வற்றுவது போன்ற ஆசையைக் காட்டி, மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாமல் காத்திருக்க வைத்தனர். கடைசியில் கடலும் வற்றவில்லை, மீனும் கிடைக்கவில்லை, கொக்குக்கு உணவும் கிடைக்கவில்லை, அது குடல் வற்றிச் செத்த மாதிரி, தமிழர்களுக்கு தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வும் கிட்டவில்லை, மாகாண சபைத் தேர்தலும் இடம்பெறவில்லை, ஒரு மண்ணும் நடக்கவில்லை என்ற ஆதங்கத்தையே கொட்டித் தீர்த்தார் சிவஞானம்.**

**இரண்டு, மூன்று வருடங்களுக்கு மேலாக மக்கள் தமது இறைமையைப் பிரயோகிக்கும் முறைமைகளுள் ஒன்றான மாகாணத் தேர்தல்கள் இந்த இலங்கைத் தீவில் நடக்கவில்லை.**

**இந்தப் பத்தியில் நாம் பல தடவைகள் – ஏலவே – திரும்பத் திரும்பக் கூறியபடி, நல்லாட்சி அரசின் கீழ் மாகாண சபைத் தேர்தல்கள் உரிய காலத்தில் நடைபெறாமல் போனமைக்கு, நல்லாட்சி அரசினர் மட்டுமல்லர், அவர்களது ஆட்சி நிலைத்திருக்கின்றமைக்கு நான்கரை ஆண்டுகளாக முண்டு கொடுத்து, அதன் மூலம் கிடைத்த எதிர்க்கட்சித் தலைவர் உட்படப் பல பவிசுகளை அனுபவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் காரணம்தான்.**

**சரியோ, பிழையோ மாகாண சபை ஆட்சி முறைமைக்கான 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் கொண்டு வரப்பட்டது இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்தத் தான்.**

**அந்த ஒப்பந்தமே பிரதானமாக வடக்கு – கிழக்கைத் தாயகமாகக் கொண்ட தமிழர்களுக்கு அதிகாரங்களை மாகாண மட்டத்தில் பகிர்வதை இலக்காக வைத்தே செய்யப்பட்டது.**

**எனவே, மாகாண சபை முறைமை இந்த நாட்டில் கொண்டு வரப்பட்டது முக்கியமாகத் தமிழர்களுக்கு நீதி செய்யும் நோக்கத்தை இலக்காகக் கொண்டே என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.**

**அத்தகைய மாகாண சபைத் தேர்தல் நடைபெறாமல் – நடத்தப்படாமல் – தள்ளிப்போடும் தென்னிலங்கை அதிகார மையத்தின் முயற்சிகளுக்குத் தமிழர் தலைமையும் ஒத்து ஊதி , இணங்கிப் போனமை ஒரு வகையில் வரலாற்றுத் தவறுதான்.**

**அப்படி மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படாமல் – தேர்ந்தெடுக்கப்பட மாகாண சபைகளே இல்லாமல் – இரண்டு ஆண்டுகளுக்கு மேல் நாட்டில் உள்ள அனைத்து மாகாண சபைகளும் தாராளமாக குழப்பமின்றி செயற்பட்டு வருவதால்தான் மாகாண சபைத் தேர்தலே தேவைதானா என்ற கேள்வி தெற்கில் எழுந்துள்ளது. மாகாண சபை முறைமையை ஒழிக்க வேண்டும் என்று கூறும் – கோரும் – தரப்புகளின் வாதம் அதனால்தான் இன்று எடுபடுகின்றது என்பதும் மறுக்க முடியாத விடயமாகும்.**

**புதிய அரசமைப்பு உருவாக்கும் முயற்சியை, இடையில் மாகாணத் தேர்தல்களை நடத்துவது குழப்பி விடும் என்று கருதியோ–**

**அல்லது மாகாண சபைத் தேர்தலில் தமக்குக் கிடைக்கக் கூடிய பின்னடைவைச் சமாளிக்க முடியாது என்று நினைத்தோ–**

**அத்தேர்தலை நடத்தாமல் தள்ளிப் போகும் ஒவ்வொரு முயற்சிக்கும் கூட்டமைப்பு உதவித் தவறிழைத்திருக்கின்றது.**

**இது, சீ.வி.கே.சிவஞானம் கூறியமை போல ‘கடல் வற்றும் என்று காத்திருந்த கொக்கு குடல் வற்றிச் செத்த கதைதான்’!**

## திலீபனின் போராட்டம் சமூக விடுதலைக்கானது அதற்கான கௌரவத்தினைக் கொடுக்கின்றோம்!

### என்கிறார் அரச ஆதரவு அமைச்சர் வியாழேந்திரன்



தியாகி திலீபனின் போராட்டம் ஒரு சமூகத்தின் விடுதலைக்கான போராட்டம் எனவும் அதற்கான கௌரவத்தை கொடுத்துக் கொண்டிருக்கின்றோம் என்றும் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரித்துள்ளார்.

அத்துடன், தியாகி திலீபனின் அஹிம்சை வழிப் போராட்டத்தை தாங்கள் ஒருபோதும் கொச்சைப்படுத்தியமை கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மட்டக்களப்பு புளியந்தீவில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாங்கள் கடந்த காலங்களில்கூட திலீபனின் அஹிம்சைவழிப் போராட்டத்தை கொச்சப்படுத்தியவர்கள் அல்லர். நாங்கள் அதனை மதித்திருக்கின்றோம்.

இந்த நாட்டிலே இருக்கின்ற தமிழ் மக்கள் ஏனைய சமூகத்துக்கு இணையாக தலைநிமிர்ந்து வாழவேண்டும், யாருக்கும் அடிமையாக இருக்கக் கூடாது என்ற தியாகி திலீபனின் கனவை நனவாக்க நாங்கள் இன்று அரசாங்கத்தோடு இணைந்திருந்து வேலை செய்துகொண்டிருக்கிறோம்.

சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக தியாகி திலீபனின் விடயத்தில் நாங்கள் அமைதியாக இருந்தோம் என்பதை குற்றமாகக் கருதுகின்றனர். நாங்கள் வடக்கு கிழக்கில் இடம்பெற்ற கடையடைப்பு போராட்டத்தை குழப்பவில்லை. மறுப்பும் தெரிவிக்கவில்லை. – என்று தெரிவித்தார்.

## மீண்டும் ஒத்துழைப்பைத் தாருங்கள் மக்களைக் கோரும் சுகாதார அமைச்சு



கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு கடந்த காலங்களைப் போன்று மீண்டும் ஒத்துழைப்பைத் தாருங்கள் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

அந்த ஊடக சந்திப்பில் பவித்ரா வன்னியாராச்சி மேலும் கூறியுள்ளவை வருமாறு –

ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம், கொரோனா தொற்றை ஒழிப்பதற்காக அதிகம் முக்கியதுவம் வழங்கியமை காரணமாக, ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாக கொரோனா ஒழிப்பு விடயத்தில் இலங்கை விளங்கியது. நாமும் கொரோனா தொற்றிலிருந்து விரைவாக மீண்டோம்.

இதேவேளை இன்று ஒருவர் கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார். எனவே ஏனையோருக்குப் பரவுவதைத் தடுப்பதற்காக பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அத்துடன் மக்கள் அனைவரும் சுகாதார வழிமுறைகளைத் தொடர்ந்து பின்பற்றுவதுடன், அதிக சனநெருக்கடி மிக்க பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம்.

மேலும், கடந்த காலங்களில் போன்று மீண்டும் ஒத்துழைப்பை தாருங்கள். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வவுனியாவில் ஒருவர் துப்பாக்கிகளுடன் கைது!



வவுனியா, பன்றிகெய்தகுளம் பகுதியில், விலங்குகளை வேட்டையாடுவதற்குப் பயன்படுத்தப்படும் சட்டவிரோதே துப்பாக்கிகளுடன் ஒருவரை கைது செய்துள்ளனர் என ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, பன்றிகெய்தகுளத்தில் வீடொன்றில் சட்ட விரோதமாக துப்பாக்கிகளை (இடியன்துவக்கு) மறைத்து வைத்திருப்பதாக ஓமந்தை பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இந்நிலையில், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் நான்கு சட்டவிரோத துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டமையுடன் அதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டு.நகரில் விபத்து; ஒருவர் பலி சந்தேகநபர் விளக்க மறியலில்!

மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதி சத்துருக்கொண்டான் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில், தன்னாமுனை விபுலானந்தபுரத்தைச் சேர்ந்த 38 வயதுடைய ஞானசிங்கம் ஜீவானந்தம் என்பவரே உயிரிழந்தவராவார்.

கொழும்பு மட்டக்களப்பு பிரதான வீதியில், ஏறாவூர் பகுதில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த காரும் மட்டக்களப்பில் இருந்து ஏறாவூர் பகுதிக்கு பயணித்த மோட்டர்சைக்கிளும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு, நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இதன்போது, மோட்டர் சைக்கிள் பயணித்தவர், படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற நிலையில் உயிரிழந்துள்ளார்

இதில் உயிரிழந்தவரின் சடலம், மட்டு. போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், காரை ஓட்டிச் சென்றவரை கைது செய்து, மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் ஏ.சி.ஏ.றிஸ்வான் முன்னிலையில் நேற்று, பொலிஸார் ஆஜர்படுத்தியபோது, அவரை எதிர்வரும் 19 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# லடாக்குக்குச் செல்லும் வகையில் குகைவழிப் பாதையை அமைக்குக!

## பிரதமர் மோடி வலியுறுத்தல்



லடாக் பகுதிக்கு ஆண்டு முழுவதும் சென்று வரும் வகையில் குகைவழிப்பாதை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் நரேந்திர மோடி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதேவேளை இமாச்சலத்தின் மணாலி – லே நெடுஞ்சாலையில் ரோத்தங் கணவாய்க்குக் கீழே மலையைக் குடைந்து 9 கிலோமீற்றர் நீளத்துக்குக் குகைப்பாதை அமைத்துள்ளமை எல்லைச் சாலைகள் அமைப்பின் மாபெரும் சாதனையாகக் கருதப்படுகிறது.

அந்தக் குகைப்பாதையின் திறப்பு விழாவிலேயே சிங்கு லாவில் குகைப்பாதை அமைத்து எந்தக் காலநிலையிலும் லடாக் பகுதிக்குச் செல்ல வகை செய்ய வேண்டும் எனப் பிரதமர் கேட்டுக்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் கொரோனாத் தொற்று எண்ணிக்கை 66 லட்சம் கடந்தது!



இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) 74 ஆயிரத்து 767 ஆக அதிகரித்துள்ளது. இதனையடுத்து பாதிக் கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 66 லட்சத்து 22 ஆயிரத்து 180 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 902. இதையடுத்து, உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 714 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 55 லட்சத்து 83 ஆயிரமாக அதிகரித்துள்ள அதேவேளை 9 லட்சத்து 36 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# கொரோனா அச்சத்துக்கு மத்தியில் புதுச்சேரியில் பாடசாலைகள் திறப்பு

கொரோனா பரவலுக்கு மத்தியில் புதுச்சேரி, காரைக்காலில் இன்று (திங்கட்கிழமை) முதல் பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

இதன்படி எதிர்வரும் 7 ஆம் திகதி வரை வகுப்பறைகள் சுத்தம் செய்யப்பட்டு தனிநபர் இடைவெளியுடன் இருக்கைகள் அமைக்கப்படவுள்ளன. வாரத்தில் 6 நாள்களுக்கு காலை 10 மணி முதல் மதியம் ஒரு மணி வரை மட்டுமே வகுப்புகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள விருப்பத்தின் பேரில் பெற்றோர் அனுமதியுடன் பாடசாலைக்கு சமுகமளிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில், 9, 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும், செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் 10, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் வகுப்புகள் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# முதலமைச்சர் வேட்பாளர் அறிவிப்பு புதன்கிழமை!

## பழனிச்சாமியுடன் அமைச்சர்கள் இன்று திடீர் ஆலோசனை

தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை திடீரென சந்தித்து அ.தி.மு.க.வின் சில மூத்த அமைச்சர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

தலைமைச் செயலகத்தில் இன்று (திங்கட்கிழமை) இந்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் தங்கமணி, வேலுமணி, செங்கோட்டையன், திண்டுக்கல் சீனிவாசன் உள்ளிட்ட அமைச்சர்கள் பங்கேற்றனர்.

தமிழக சட்டமன்ற தேர்தல் அடுத்த ஆண்டு மே மாதம் நடைபெறவுள்ளது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில், அ.தி.மு.க.வில் முதலமைச்சர் வேட்பாளர் யார்? என்பதில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமிக்கும் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்திற்கும் இடையே போட்டி நிலவுகிறது.

இந்நிலையில் நாளை மறுதினம் முதலமைச்சர் வேட்பாளர் அறிவிக்கப்படவுள்ளதாக செயற்குழு கூட்டத்திற்கு பின் துணை ஒருங்கிணைப்பாளர் கே.பி.முனுசாமி அறிவித்திருந்தார்.

இதனிடையே அ.தி.மு.க. கட்சியையும் ஆட்சியையும் வழிநடத்த 11 பேர் கொண்ட வழிகாட்டுதல் குழுவை அமைக்க வேண்டும் என்று ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் தனது ஆதரவாளர்களுடன் ஓ. பன்னீர்செல்வம் கடந்த 2 தினங்களாக ஆலோசனை நடத்தி வருகிறார்.

இந்த நிலையில் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் இன்று காலை தனது டுவிட்டர் பக்கத்தில், தமிழக மக்கள், அ.தி.மு.க. தொண்டர்கள் நலனை கருத்திற்கொண்டு தனது முடிவு இருக்கும் என தெரிவித்தார்.

இவ்வாறான சூழ்நிலையிலேயே தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியுடன் அமைச்சர்கள் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

# 20 - 25 கோடி பேருக்கு கொரோனா ஊசி ஜூலைக்கு முன்னர் போடப்படும்

## மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷ வர்தன் தெரிவிப்பு

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் 20 முதல் 25 கோடி பேருக்கு கொரோனா தடுப்பூசி போடப்படும் என மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷ்வர்தன் தெரிவித்துள்ளார்.

சமூகவலைத் தளத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர் –

ஜூலை மாதத்திற்கு முன்னர் 40 முதல் 50 கோடி டோசுகள் கொரோனா தடுப்பூசியை கொள்வனவு செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

முதலில் அரசு – தனியார் மருத்



துவர்கள், தாதியர்கள், துணை மருத்துவபணியாளர்கள் தூய்மைப் பணியாளர்களுக்கு தடுப்பூசி போடப்படும். தடுப்பூசியை வெற்றிகரமாக போடும் திட்டத்திற்காக கொரோனா தொடர்பான நோய் எதிர்ப்பு தரவுகளை அரசு திரட்டி வருகிறது.

இதற்காக நிதி ஆயோக் உறுப்பினர் விகே பால் தலைமையில் உயர்மட்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. தடுப்பூசியை மத்திய அரசே நேரடியாக வாங்கி அது பயனாளர்களிடம் சென்று சேருகின்றமையைக் கண்காணிக்கும்.

வெளிநாடுகளில் கண்டுபிடிக்கப்படும் கொரோனா தடுப்பூசிகள் இந்திய மக்களுக்கு பாதுகாப்பானவையாகவும், நோய் எதிர்ப்பைத் தூண்டும் விதமாகவும் உள்ளனவா என்பதை உறுதி செய்த பின்னரே அவை பயன்படுத்தப்படும். ரஷ்ய தடுப்பூசியான Sputnik-V இறுதிகட்ட சோதனையை இந்தியாவில் நடத்துவது பற்றி இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஹத்ராஸில் பாலியல் வல்லுறவுக்கு உட்பட்ட பெண்ணின் உடலில் பலாத்கார அடையாளம்!

## தடயவியல் வல்லுநர்களின் அறிக்கை



ஹத்ராஸில் பாலியல் வன்கொடுமைக்குஉள்ளான பெண்ணின் உடலில் பலாத்காரம் செய்ததற்கான அடையாளங்கள் இருந்தன என அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத் தடயவியல் வல்லுநர்களின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஹத்ராசில் வயலுக்குச் சென்றபோது 4 பேரால் கூட்டுப் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட இளம்பெண் குற்றுயிராக அலிகார் முஸ்லிம் பல் கலைக்கழக வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

நீதிபதி முன்னிலையில் வாக்குமூலம் அளித்த அவர், சந்தீப், ராமு, லவகு, ரவி ஆகிய 4 பேர் தன்னைப் பாலியல் வன்கொடுமை செய்தனர் எனவும் துவாயால் கழுத்தை நெரித்தனர் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

அதன் பின்னர் அந்தப் பெண் மேலதிக சிகிச்சைகளுக்காக டெல்லி சப்தர்ஜங் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இது தொடர்பாக அலிகார் மருத்துவ வல்லுநர்கள் தயாரித்துள்ள மருத்துவ – சட்டப் புலனாய்வு அறிக்கையில், அந்தப் பெண் பலாத்காரம் செய்யப்பட்டமைக்கான அடையாளங்கள் அந்தப் பெண்ணின் உடலில் காணப்பட்டன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஹத்ராஸ் பாலியல் சம்பவத்தை கண்டித்து காங்கிரஸ் போராட்டம்

ஹத்ராஸ் பாலியல் துஷ்பிரயோக சம்பவத்தைக் கண்டித்து இன்று (திங்கட்கிழமை) நாடு தழுவிய ரீதியில் போராட்டத்தை காங்கிரஸ் கட்சி நடத்தியது.

இது தொடர்பாகப் பேசிய அக்கட்சியின் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால்–

இந்தப்போராட்டத்தில்காங்கிரஸ்நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சி நிர்வாகிகள் பங்கேற்றார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் ஹத்ராஸ் சம்பவத்திற்கு நீதி கேட்டு மாநிலங்கள் மற்றும் மாவட்டத் தலைமையகங்களில் இன்று சத்தியாக்கிரக போராட்டம் நடத்தப்பட்டது என்றும் தெரிவித்தார்.

ஹத்ராஸ் பாலியல் துஷ்பிரயோக சம்பவத்திற்கு எதிராக நாடுமுழுவதும் பலர் போராட்டங்களில் ஈடுபட்டு தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். இதற்கிடையில் குறித்த பெண் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளாரா என்பது தொடர்பான உறுதியான அறிக்கை எதுவும் வெளிவரவில்லை என பொலிஸார் குறிப்பிட்டிருந்தனர்.

இதனையடுத்து நேற்றைய தினம் இது தொடர்பான தடயவியல் அறிக்கை வெளி யாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தங்கத்தின் விலை வீழ்ச்சி அடைந்தது!

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு 384 ரூபா குறைந்து 38 ஆயிரத்து 416 ரூபாக்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கம் விலை கிராமுக்கு 48 ரூபா குறைந்து 4 ஆயிரத்து 802 ரூபாக்கு விற்பனை செய்யப்படுகிறது.

சென்னையில் ஒரு கிராம் வெள்ளியின் விலை 60 காசு குறைந்து 64 ரூபா 10 காசுகளாக விற்பனை செய்யப்படுகிறது.

## பிரேஸிலில் மார்ச்சுக்குப் பிறகு கொரோனா தாக்கம் குறைவு!



பிரேஸிலில் மார்ச் மாத நடுப்பகுதிக்கு பிறகு நாளொன்றுக்கான கொரோனா வைரஸ் (கொவிட் – 19) பாதிப்பு குறைந்துள்ளது.

கடந்த 24 மணித்தியாலத்தில் பிரேஸிலில், எட்டாயிரத்து 456 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டனர். 364 பேர் உயிரிழந்தனர்.

கடந்த மார்ச் மாதம் 17ஆம் திகதி 7 ஆயிரத்து 938 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டமைக்குப் பிறகு தற்போது தான் குறைவான நாளொன்றுக்கான பாதிப்பு பதிவாகியுள்ளது.

கொவிட் – 19 தொற்றால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட மூன்றாவது நாடாக விளங்கும் பிரேஸிலில், இதுவரை 49 லட்சத்து 15ஆயிரத்து 289 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 375 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை ஐந்து லட்சத்து ஐந்தாயிரத்து 706 பேரவைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் எட்டாயிரத்து 318பேர் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளனர்.

அத்துடன் இதுவரை 42 லட்சத்து 63ஆயிரத்து 208பேர் வைரஸ் தொற்றிலிருந்து மீண்டு வீடு திரும்பியுள்ளனர்.

## இரண்டாவது பெரிய நகர் மீது ஆர்மீனிய படைகள் தாக்கின!

### குற்றஞ்சாட்டுகின்றது அஜர்பைஜான்



ஆர்மீனியா மற்றும் அஜர்பைஜான் ஆகிய இரு நாடுகளை பிரிக்கும் நாகோர்னோ – கராபாக் பிராந்தியத்தில் இரண்டாவது வாரமாக தொடர்ந்தும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை, நாகோர்னோ – கராபாக்கின் முக்கிய நகரமான ஸ்டீபனகெர்ட் மீது அஜர்பைஜானின் படைகள் தாக்குதலை நடத்தின என்று ஆர்மீனிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதே நேரத்தில் அஜர்பைஜானின் இரண்டாவது பெரிய நகரமான கஞ்சா ஆர்மீனியப் படைகளால் தீப்பற்றி எரிவதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாகோர்னோ – கராபக்கின் தலைவர், தனது படைகள் கஞ்சாவில் அமைந்துள்ள ஓர் இராணுவ விமானத் தளத்தை அழித்தன எனக் கூறினார்.

1990 களில் இருந்து சுமார் 30 ஆயிரம் பேர் கொல்லப்பட்ட பின்னர் குறித்த இரு நாடுகளுக்கும் இடையில் மோசமான நிலை ஏற்பட்டுள்ளது.

## கொரோனாவில் இருந்து நான் மீண்டு வருவேன்!

### ட்ரம்ப் நம்பிக்கை



இராணுவ வைத்தியசாலையில் கொரோனாவுக்கு சிகிச்சைப் பெற்று வரும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், “நான் நன்றாக இருக்கிறேன் விரைவில் திரும்பி வருவேன்”– என்றுகூறிகாணொலியொன்றை வெளியிட்டுள்ளார்.

உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் தாக்குதலுக்கு அமெரிக்க வல்லரசின் ஜனாதிபதி ட்ரம்பும் உள்ளாகியுள்ளார். 74 வயதான அவருக்கும் 50 வயதான அவருடைய மனைவி மெலனியாவுக்கும் கொரோனா தொற்று பாதிப்பு இருக்கின்றமை கடந்த முதலாம் திகதி உறுதியானது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் மாதம் 3 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், இந்த விடயம் உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

முதலில் வொஷிங்டன் வெள்ளை மாளிகையில் சிகிச்சைப் பெற்ற ட்ரம்ப், முன் எச்சரிக்கை நடவடிக்கையாக 2 ஆம் திகதி பெதஸ்தாவில் உள்ள வால்டர் ரீட் இராணுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நிலையில் அவர் இன்று (திங்கட்கிழமை) காலை வைத்தியசாலையில் இருந்து தனது ருவிட்டரில் காணொலியொன்றைப் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் –

வைத்தியசாலையில் பணியாற்றும் தாதிகள், வைத்தியர்கள், இராணுவத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரி விப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் எவ்வாறான யூகங்கள் கூறப்பட்டாலும் நான் கொரோனாவில் இருந்து மீண்டு வருவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிலும், உலகமெங்கும் உள்ள மக்களுக்கும் அவர்களது ஆதரவு வார்த்தைகளுக்காகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் அவர் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் உடல்நிலை மேம்பட்டு வருவதாக அவரது மருத்துவக் குழு தெரிவித்தது.

இந்த நிலையில் அவரை இன்று வைத்தியசாலையிலிருந்து வெளியேற்றலாம் எனவும் மருத்துவக் குழு நேற்று அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ட்ரம்ப் குணமடைய வேண்டி ஜோ பிடனும் பிரார்த்தனை!



அமெரிக்காவில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் அவரது மனைவி விரைவில் நலம் பெற பிரார்த்திப்பதாக ஜனநாயக கட்சி வேட்பாளர் ஜோ பிடன் கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ட்ரம்ப்பும் ஜோ பிடனும் போட்டியில் நிற்கும் நிலையில் ட்ரம்ப் கொரோனாவால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நிலையில் செய்தியாளர்களை சந்தித்த ஜோ பிடன், இது அரசியல் விடயமல்ல என்றும் கொரோனா பாதிப்பை நாம் தீவிரமாக எடுத்துக் கோள்ள வேண்டும் என்றும் கூறினார்.

## பிரித்தானியாவில் கொரோனா பாதிப்பு 5 லட்சம் தாண்டியது!

பிரித்தானியாவில் கொரோனா வைரஸ் (கொவிட் – 19) தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஐந்து லட்சத்தைக் கடந்தது.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளி விவரங்களின் படி, பிரித்தானியாவில் கொவிட் – 19 தொற்றால் ஐந்து லட்சத்து இரண்டாயிரத்து 978 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலகளவில் கொவிட் – 19 தொற்றால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட 12 ஆவது நாடாக விளங்கும் பிரித்தானியாவில் இதுவரை 42 ஆயிரத்து 350 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 24 மணித்தியாலத்தில் மட் டும் ஏழாயிரத்து 982 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டனர். 33பேர் உயிரிழந்தனர்.

## கொரோனா அச்சத்துக்கு மத்தியிலும் புளோரிடா செல்கின்றார் ஜோபிடன்!



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜோ பிடன், கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி ட்ரம்புடன் விவாதத்தில் கலந்துக்கொண்ட போதிலும் திங்களன்று புளோரிடாவுக்குச் செல்வதாக தெரிவித்துள்ளார்.

அவர் மியாமியில் உள்ள ஒரு கலாசார மையத்தைப் பார்வையிடவும், வெளிப்புற நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவும் திட்டமிட்டுள்ளார். அங்கு அவர் பொது மக்கள் எழுப்பும் கேள்விகளுக்குப் பதிலளிப்பார்.

ட்ரம்ப் நேர்மறையை பரிசோதித்ததற்கு மூன்று நாள்களுக்கு முன்னர் நடந்த இந்த நிகழ்வின் போது ஜோ பிடனுக்கு வைரஸ் தொற்று பரவியிருக்கலாம் எனச சந்தேகிக்கப்பட்டது. இதற்காக அவருக்கு இரண்டு முறை கொவிட் – 19 பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில் அவருக்கு வைரஸ் தொற்று இல்லை என தெரியவந்துள்ளது. எனினும், அறிகுறிகளைக் காட்டத் தொடங்க ஒரு நபர் பாதிக்கப்பட்ட தருணத்திலிருந்து சராசரியாக ஐந்து நாள்கள் ஆகும்.

வைரஸ் பாதிப்புக்குள்ளான எவரும் 14 நாள்களுக்கு தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்று நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு வழிகாட்டுதல்கள் கூறுகின்றன.

செவ்வாயன்று நடந்த 90 நிமிட ஜனாதிபதி விவாதத்தில், இரு வேட்பாளர்களும் மேடையில் ஒருவருக்கொருவர் கணிசமான தொலைவில் முகக்கவசங்கள் இல்லாமல் நின்றமை குறிப்பிடத்தக்கது.

## ரோமானியாவில் கொரோனா தொற்று 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலி!

ரோமானியாவில் கொரோனா வைரஸ் (கொவிட் – 19) தொற்றால், மொத்தமாக ஐந்தாயிரததுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, ஐந்தாயிரத்து மூன்று பேர் வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

உலகளவில் கொவிட் – 19 தொற்றால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட 29 ஆவது நாடாக விளங்கும் ரோமேனியாவில், இதுவரை ஒரு லட்சத்து 35 ஆயிரத்து 900 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் அங்கு ஆயிரத்து 835 பேர் பாதிக்கப்பட்டமையோடு, 56 பேர் உயிரிழந்தனர்.

தற்போதுவரை 22 ஆயிரத்து 762 பேர் வைரஸ் தொற்றுக்காக அங்குள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 598 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

அத்துடன் இதுவரை ஒரு லட்சத்து எட்டாயிரத்து 135 பேர் வைரஸ் தொற்றிலிருந்து மீண்டு வீடு திரும்பியுள்ளனர்.

## கனடாவில் கொரோனா தொற்று அதிகரிப்பு ஒரு லட்சத்து 64 ஆயிரம் பேர் பாதிப்பு!

கனடாவில் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 64 ஆயிரத்து 471 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 462 ஆக அதிகரித்துள்ளதாக அந்நாட்டு சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

நேற்று மட்டும் புதிதாக 1,812 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன் 53 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தரவுகள் தெரிவிக்கின்றன.

அங்கு கியூபெக் மாநிலத்திலேயே இதுவரை அதிகளவிலான நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். குறிப்பாக அங்கு இதுவரை 77 ஆயிரத்து 380 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமையுடன் 5 ஆயிரத்து 867 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்தோடு ஒன்ராறியோவில் 53 ஆயிரத்து 633 பேர் பாதிக்கப்பட்டுள்ளமையுடன் 2 ஆயிரத்து 968 பேர் உயிரிழந்துள்ளனர். ஆல்பேர்ட்டாவில் 18 ஆயிரத்து 357 பேரும் பிரிட்டி; கொலம்பியாவில் 9 ஆயிரத்து 381 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# 20ஆம் திருத்தத்தால் ஆபத்து ஐ.நா. சபையில் எடுத்துரைப்பு!

## அருட்தந்தை ஆ.குழந்தைசாமி விளக்கம்



கொழும்பு, ஒக்.05

இலங்கை அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள 20 ஆவது திருத்தச் சட்டமூலம் ஜனநாயகத்துக்கு ஆபத்தாக அமையுமென அருட்தந்தை ஆ.குழந்தைசாமி, ஐ.நா.வில் எடுத்துரைத்துள்ளார்.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 45 ஆவது கூட்டத்தொடர் கடந்த செப்ரெம்பர் 14ஆம் திகதி ஆரம்பமாகியது. இந்தக் கூட்டத்தொடர் எதிர்வரும் ஒக்ரோபர் 7 ஆம் திகதி வரை நடைபெற இருக்கின்றது.

அந்தவகையில் மூன்றாவது வாரத்தில் ஐ.நா.மனித உரிமைகள் சபையின் பிரதான அவையில் இடம்பெற்ற பிரிவு 6 தொடர்பான பொது விவாதத்தில் தமிழ் உலகம் என்ற அமைப்பு சார்பாக உரையாற்றிய அருட்தந்தை ஆ.குழந்தைசாமி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

புதிய அரசமைப்பு அதிகார பகிர்வின் அடிப்படைக் கொள்கைகளைத் தெளிவாக, வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

மேலும், புதிய அரசமைப்பை உருவாக்கும்போது உருவாக்க உரிமையுள்ளவர்களுக்கு உரிய இடத்தை வழங்கவேண்டும்.

20 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டம், ஜனாதிபதிக்கு தனது ஆட்சிகாலத்தில் சட்டரீதியான நடவடிக்கைகளிலிருந்து விடுவிக்கிறது. ஜனாதிபதி தனக்கு எத்தனை அமைச்சுகளையும் வைத்துகொள்ளலாம். நாடாளுமன்றபேரவை நாடாளுமன்ற உறுப்பினர்களால் மட்டும் உருவாக்கப்படுகிறது.

இதனால் பிற நாடாளுமன்ற கட்சிகளிருந்து உறுப்பினர்களையும் திறமைவாய்ந்த, ஒழுக்கமுள்ள நபர்களையும் சேர்க்காமல், இலங்கையின் பன்மைத்தன்மையை அழிக்கிறது.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தை ஓராண்டுக்குப் பிறகு எப்பொழுது வேண்டுமானாலும் பிரதமரைக் கலந்து ஆலோசிக்காமல் கலைக்க அதிகாரம் உண்டு.

அதேபோன்று தலைமை அமைச்சர், அவரால் பரிந்துரைசெய்யப்பட்ட இருவர், எதிர்கட்சி தலைவர், அமைச்சர், இரஜாங்க அமைச்சர், இணை அமைச்சர் ஆகியோரை எப்பொழுது வேண்டுமானாலும் ஜனாதிபதி நீக்கலாம், எவரை வேண்டுமானாலும் நியமிக்கலாம்.

இதனால் நடாளுமன்ற பேரவை அரசமைப்பு பேரவையைவிட பலவீனமாகக்கப்பட்டுள்ளது. தேசிய உருவாக்க அமைப்பையும் சேவையை தணிக்கை செய்யும் அமைப்பையும் கலைத்துவிட்டார். எத்தனை அமைச்சர்கள், இணை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் வேண்டுமானாலும் நியமிக்கலாம்.

ஜனாதிபதியின் சர்வாதிகாரம் இலங்கையில் மக்களாட்சியை அகற்றியது. மக்களாட்சி அழிப்பு சர்வாதிகாரத்தை பெற்றெடுக்கும். அது தமிழ் மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே இந்த பேரவை, தமிழ் மக்களின் உரிமையைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.- என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனா உறுதியானோர் எண்ணிக்கை அதிகரிப்பு!

இலங்கையில் மேலும் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து நாட்டில் கொரோனா தொற்று உறுதியானவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 402 ஆக அதிகரித்துள்ளது.

இவை தவிர, நேற்றைய தினம் மேலும் ஐவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தது.

உக்ரைன் நாட்டைச் சேர்ந்த கடலோடி ஒருவருக் கும் சவுதி அரேபியாவில் இருந்து நாடு திரும்பிய ஒருவ ருக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து வருகை தந்த கடலோடி ஒருவருக்கும் நேற்றுகொரோனாவைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

அத்துடன், ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து நாடு திரும்பிய இரண்டு இலங்கையர்களுக்கும் கொரோனா தொற்று உறுதியானதாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை திவுலபிட்டியவில் நேற்று பெண்ணொருவருக்கு கொரோனா தொற்று உறுதியானதோடு, அவரது 16 வயது மகளுக்கும் தொற்று உறுதியானது.

இதனையடுத்து நாட்டில் கொரோனா தொற்று உறுதியானவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 402 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று உறுதியான மூவாயிரத்து 258 பேர் இதுவரையில் தொற்றில் இருந்துகுணமடைந்துள்ளனர்.

அதேநேரம் தொற்றுக்குஉள்ளான 131 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேநேரம் இந்த வைரஸ் தொற்று காரணமாக இலங்கையில் இதுவரையில் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பிந்திய தகவல் முதலாம் பக்கத்தில்)

## 20 இற்கு எதிரான ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்ப்பு நடவடிக்கை இன்று முதல் ஆரம்பம்!

கொழும்பு, ஒக்.05

20 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி இன்று (திங்கட்கிழமை) முதல் எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளது.

இந்த நடவடிக்கையின் முதல் கட்டமாக இன்றைய தினம் நாடு முழுவதும் கையேடுகளை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அதன் பொதுச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படவுள்ள இந்தப்போராட்டத்துக்கு எதிர்க்கட்சிகளில் பெரும்பாலானவை ஆதரவு வெளியிட்டுள்ளன.

பொதுமக்களும் கறுப்புக்கொடிகளை கட்டி 20 ஆவது திருத்திற்கான எதிர்ப்புக்களை வெளிப்படுத்த வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்ப்பில் ஈடுபட்ட ஏனைய அரசியல் கட்சிகளும் முன்னெடுக்கவுள்ளன.

## பஸ் பயணத்திலும் கட்டுப்பாடு அதிகரிப்பு

பஸ்களில் ஆசனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான அறிவிப்பை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வெளியிட்டார்.

ஏற்கனவே இந்த திட்டம் நாட்டில் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் கொரோனா தொற்று அச்சம் குறைவடைந்ததமையைத் தொடர்ந்து, அதனை பெரிதளவில் நடைமுறைப்படுத்தவில்லை.

இந்த நிலையில், உடன் அமுலுக்கு வரும் வரையில் இந்த திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக திலும் அமுனுகம தெரிவித்தார்.

கம்பஹா - திவுலபிடிய பகுதியில் வசித்து வரும் 39 வயதுடைய பெண்ணொருவருக்கு, கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து மினுவாங்கொட மற்றும் திவுலபிடிய பகுதியில் உள்ள 07 கிராம சேவகர் பிரிவுகளுக்கு மறு அறிவித்தல் வரும் வரை பொலிஸ் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது.

அந்தப் பகுதிகளுக்கு நுழைவது மற்றும் வெளியேறுவது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது என பொலிஸ் தலைமையகம் அறிவித்தது.


இந்த நிலையிலேயே பஸ்களில் ஆசனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும் என உடன் அமுலுக்கு வரும் வகையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நால்வருக்கு குளவிக் கொட்டு

பதுளை, ஒக்.05

பதுளை, லுனுகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சோலன்ஸ் தோட்டத்தில் நான்கு தொழிலாளர்கள் இன்று குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

கொழுந்து கொய்துகொண்டிருக்கை யிலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் லுனுகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



## இறைச்சிக்காக மாடுவெட்டத் தடைசட்டம் உடனடியாக அமுலுக்கு வருதல்வேண்டும்

### ஓமல்பே சோபித தேரர் வலியுறுத்து

கொழும்பு, ஒக்.05

இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவதற்கான தடை உடனடியாக அமுலுக்கு வரவேண்டும் என விலங்குகள் மற்றும் இயற்கைக்கான நீதி அமைப்பின் தலைவர் ஓமல்பே சோபித்த தேரர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், நாட்டின் மீது அக்கறை கொண்ட தலைவர் செய்ய வேண்டியது அதிகாரங்கள் அனைத்தையும் தன் வசப்படுத்திக் கொள்வதல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு, நாரஹேன்பிட்டி ஸ்ரீ சங்கா விகாரை மண்டபத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) குறித்த அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

உயிரினங்களை வதைப்பதை அனைத்து சமயங்களும் பாவச் செயல் என்றே கூறுகின்றன. இந்நிலையில் இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவதைத் தடைசெய்ய வேண்டும் என்பது தொடர்ச்சியாகப் பேசப்பட்டு வரும் விடயமாகும்.

இதற்கமைய, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு மாடுகளை வெட்டுகின்றமையைத் தடைசெய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். இதற்கு ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் அனைவரும் இன, மத பேதமின்றி அதனை ஆதரித்திருந்தனர். ஆனால், இந்த தீர்மானமானது உடனே நிறைவேற்றப்படாமல் ஒரு மாதத்திற்கு பிற்போடப்பட்டது. இதற்கு பிரதான காரணம் இவ்வாறு இறைச்சிக்காக மாடுகளை வெட்டும் வர்த்தகர்களால் முன்னெடுக்கப்பட்ட அழுத்தமாகும்.

தற்போது இந்த தீர்மானம் தொடர்பாக அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. எனவே, இந்த தீர்மானத்தை நிறைவேற்ற மேலும் காலம் கடத்தாமல் அதனை உடனே அமுலுக்குக் கொண்டு வர வேண்டும்.

இந்நிலையில், சிலர் மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவது பாவச்செயல் என்றால், ஏனைய விலங்குகளை உணவுக்காக பயன்படுத்துவது பாவச்செயல் இல்லையா என கேள்வியெழுப்பி வருகின்றனர். அதுவும் பாவச் செயல்தான்.

ஆனால், முதலில் நாம் மாடுகளை இறைச்சிக்காக வெட்டுகின்றமையைத் தடுத்துவிட்டு, அதிலிருந்து ஏனைய விலங்குகளையும் இறைச்சிக்காக வெட்டுவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். முதலில் இந்த தீர்மானமானம் ஓர் இனத்தையோ மதத்தையோ இலக்கு வைத்து எடுக்கப்பட்டதல்ல என்பதை கவனத்திற் கொள்ளவேண்டும். - என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.10.2020 இல் வெளியிடப்பெற்றது.